மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**M.C.O.P No. 36/2023**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

ம.சா.1 (ரவிசந்திரன்)

கு.வி (எதிர்மனுதார் தரப்பில்)

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதனால் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எங்கு விபத்து நடந்தது என்றால் திருப்புவனம் பைபாஸ் அருகே எங்கள் ஊரான வெள்ளைக்கரை செல்லும் போது விபத்து ஏற்பட்டது. பைபாஸிலிருந்து வெள்ளைக்கரை 1மீ துாரம் இருந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட தேதி போன வருடம் ஜனவரி 26 ம் தேதி விபத்து நடந்தது. எனது மகன் பேர் வெங்கடேஷ் ஆகும். யார் வண்டியை எனது மகன் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலம் என்னால் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும். எனது மகன் சென்ற இருசக்கர வாகனத்தில் எத்தனை நபர்கள் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. அந்த வாகனத்தை யார் ஓட்டி சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் ஆஸ்பத்திரிக்கு சென்றேன். எனது மகனுக்கு என்ன என்ன காயம் ஏற்பட்டது என்றால் கை மற்றும் வலது கால் எலும்புமுறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்திருக்கிறேன். சம்பவ தேதியில் எனது மகனின் வயது 16, 11ம் வகுப்பு படித்தான். விபத்து வெள்ளக்கரையிலிருந்து தேசிய நெடுஞ்சாலை செல்லும் வழியில் நடந்தது என்றால் சரிதான். அங்கு அதிகமான போக்குவரத்தான இடம் என்றால் சரிதான். அங்கு நரிக்குடி செல்லும் பாதையில் பாரிகார்ட்டு இருப்பதால் இருபக்கமும் பார்த்து தான் செல்வார்கள் என்றால் சரிதான். எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் அரசு பேருந்து, அதன் வாகன எண் தெரியாது. அரசு பேருந்தால் தான் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு யார் சொன்னார்கள் என்றால் போலீசார் சொன்னார்கள். பாரிகார்ட்டு உள்ளதால் மெதுவாக தான் செல்லமுடியும் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியில் எல்லா வாகனமும் பொதுவாக

மெதுவாக தான் செல்லமுடியும் என்றும், எனது மகன் சென்ற வாகனத்தில் 3 நபர்கள் சென்று கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அரசு பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும், இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அஜித்குமாரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கேட்கும் இழப்பீடு பரிகாரம் இருசக்கர வாகனத்தில் 3 நபர்களை ஏற்றிச்சென்று விபத்து ஏற்பட்டதால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த அஜித்குமாரை விசாரித்தால் உண்மைநிலை தெரியவரும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை